
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026
கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிப் பாடத்திட்டம்: மாணவர்களின் ஆளுமைப் பண்புகள்

## *High and Higher Secondary School Syllabus: Personality traits of students*

**டே.பிரசல்யா** *(Ref.No: 34814/Ph.D.K8/Tamil/Full Time/October 2014/Confirm/Dt:30.09.2019)*

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி),

புதுக்கோட்டை-622 001 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)

*D. PRASALYA (Ref.No: 34814/Ph.D.K8/Tamil/Full Time/October 2014/Confirm/Dt:30.09.2019)*

*Ph.D. Research Scholar, Department of Tamil, H.H. The Rajah's College (Autonomous),*

*Pudukkottai-622 001 (Affiliated to Bharathidasan University)*

*ORCiD: https://orcid.org/0009-0009-5412-8775*

**முனைவர் சு.மாதவன்,**

நெறியாளர் — முதல்வர் (மு.கூ.பொ.), அரசு கலை அறிவியல் கல்லூரி,

செய்யூர்-603 302, செங்கல்பட்டு மாவட்டம்.

***Dr. S. MADHAVAN, Research Advisor*** *— Principal, Government Arts and Science College,*

*Seyyur-603 032, Sengalpattu District.*

*ORCiD: https://oorcid.org/0009-0008-1212-0815*

**முனைவர் ஆ.செந்தாமரைக்கண்ணி,**

இணை நெறியாளர் — இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (தன்னாட்சி),

புதுக்கோட்டை-622 001 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)

*ORCiD: https://orcid.org/0009-0007-9435-369X*

### *Abstract*

*A class as a first step for learners needs to be carefully planned and carefully managed. Teachers should follow the mindset of the high school and secondary school curriculum designers and understand the needs and requirements of the curriculum in the curriculum. Teaching each subject in the textbook will make learning special.*

**கருவிச்சொற்கள் (Keywords):** *Personality, High School, Secondary School, Class IX, Class X, Class XI and Class XII.*

### ஆய்வுச்சுருக்கம்

கற்கும் மாணவர்களுக்கு முதல் படியாக அமையும் வகுப்பானது மிகவும் கவனமாகத் திட்டமிடவும், கவனமாகக் கையாளவும் வேண்டியது. உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புப் பாடநூலை வடிவமைப்போரின் மனநிலையையும் பாடநூலில் உள்ள பாடநோக்கத்தின் அவசியம் மற்றும் தேவைகளையும் நன்கு உணர்ந்து கற்பிப்போர் பின்பற்ற வேண்டும். பாடநூலில் உள்ள ஒவ்வொரு பாடப்பகுதியையும் கற்பிப்பது கற்றலை சிறப்புறச் செய்யும்.

**கருவிச்சொற்கள் (Keywords):** ஆளுமைத்திறன், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு.

**முன்னுரை**

21-ம் நூற்றாண்டுகளில் பயன்படுத்தப்பட்டப் பாடநூல்களில் உள்ள பாடக்கருத்துக்கள், அப்பாடங்கள் மூலம் வளர்க்கப்பட்ட திறன்கள் பற்றியும் கல்வி, இலக்கியம் பற்றி அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரையிலானக் கருத்துக்கள் நன்கு ஆராயப்பட்டு ஒப்பிட்டுக்கூறப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களின் இலக்கியம் குறித்த கண்ணோட்டமும் தமிழ்மொழிப்பாடங்கள் கற்பித்தலின் போது மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் ஆசிரியர்கள் தமிழ் மொழியைக் கற்பிக்கும் போது காட்டும் அக்கறை பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. முதல் வகுப்பு முதல் மேல்நிலை இரண்டாம் ஆண்டுவரை உள்ள பாடநூல்களைக் கருத்துக்கள் கற்பித்தல் முறைகள், திறன்கள் என ஒப்பிட்டுப்பார்ப்பதன் வழி மாணவர்களின் ஆளுமைத் திறன் குறித்தத் தரவுகள் வெளிப்படுகின்றன. மாணவர்களின் ஆளுமைப் பண்புகள் குறித்த ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆளுமை**

பண்டைய காலத்தில் ஆளுமை என்பதை ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம் என்றே கருதியுள்ளனர். "ஆளுமை என்ற சொல் பர்ஸொனா என்ற இலத்தின் மொழிச் சொல்லில் இருந்து பிறந்து பர்ஸனாலிடி (Personality) என ஆங்கிலத்திலும் ஆளுமை எனத் தமிழ் மொழியிலும் பொருள்படப் பயன்பாட்டில் உள்ளது" என்று வழக்கிலுள்ளது. 1937ல் G.W.அல்போர்ட் ஆளுமை பற்றிய வெளியிட்டு உள்ள முதல் நூலில் மட்டும் ஆளுமைக்கு 53 வரையறைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆளுமையின் பண்புகள்**

தன் உணர்வுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் ஆளுமை குணம் உள்ளது. ஒருவரின் ஆளுமைப் பண்பானது அளவிடக்கூடியதே அதேபோல் சூழ்நிலைக்கு ஏற்ப மாறவும் கூடியது. மாணவர்களைப் பொருத்தவரை ஆளுமை அளவிடப்படும் போதுதான் ஒவ்வொருவரின் தனியாள் திறனை அறியவும் அத்திறன் வளர முயற்சிகள் மேற்கொள்ளவும் முடிகிறது.

**ஆளுமைத் திறன்கள்**

ஆளுமை என்பது ஒருவரின் திறனை அளவிடும் கருவியாகும். திறன்களை முழுமையாகப் பெற்றவர்களின் ஆளுமை வளர்ச்சியும் முழுமையாக இருக்கும். மாணவர்களின் மனநிலையே ஆளுமைக்கு அடிப்படையாகும். பாடம் வாரியாக மாணவர்களுக்கு ஆசிரியரின் அவர்களின் கற்பித்தல் முறைகள் குறித்த மனநிலையைப் பொருத்தே பாடங்களில் ஆளுமை வளர்ச்சியும் அமையும். தமிழ் மொழியைக் கற்கும் மாணவர்களுக்கு அம்மொழியைக் கற்கத் துவங்கியது முதல் அம்மொழியைத் தெளிவாக கற்கும்போதே மொழியில் ஆளுமைத்திறன் மேம்படுகிறது.

**ஆளுமைக் கூறுகள்**

ஆளுமை இரு கூறுகளை உடையது. அவை 1. உருவ ஆளுமை 2. உள்ள ஆளுமை

**உருவ ஆளுமை**

உடை, உடல்நலன், தோற்றப்பொலிவு ஆகிய மூன்று காரணிகளால் உருவ ஆளுமைத் தீர்மானிக்கப்படுகிறது.

**உள்ள ஆளுமை**

மனப்பான்மை, தலைமைப்பண்புகள் ஆகிய இரு காரணிகளால் உள்ள ஆளுமைத் தீர்மானிக்கப்படுகிறது.

**உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்பு வாரியாகப் பாடத்திட்டத்தின்வழி மாணவர்கள் அடைந்த ஆளுமைப் பண்புகள்**

**ஒன்பதாம் வகுப்பு (2003-2009)**

இப்பாடநூலில் செய்யுள் மற்றும் உரைநடைகள் உள்ளன. இதில் பாடநூல் வடிவமைத்தக் குழுவே செய்யுள் பகுதியில் மொழிக்கான குறிக்கோள்கள் மற்றும் உரைநடைப்பகுதியில் மொழிக்கானக் குறிக்கோள் என வரையறுத்துக் கொடுத்துள்ளன. செய்யுள் பகுதியில் ஓசையை அறிதல், படித்தல், அறிதல், கருத்தை உணர்தல், சொல்லாட்சித் திறன் அறிதல், அருஞ்சொற்பொருள், எதுகை மோனை, அணி, பா, குரல் ஏற்றத்தாழ்வு, இலக்கணக்குறிப்பு, அணி, ஓசை, கருத்து இவை மூன்றால் ஒத்தப் பிறபாடல்கள் என மொழியின் ஆளுமை பெறத்தேவையான அனைத்துப் பகுதிகளும் அறிய பயிற்சிகள் உள்ளன. இப்பயிற்சிகள் அனைத்தும் மொழிகற்றலையும் அதில் மாணவர்கள் எந்த அளவு கற்றனர் என்பதையும் அறிய மதிப்பீட்டுச் செயல்களும் உள்ளன. பயிற்சி வினாக்கள் மதிப்பீட்டுச் செயல்கள் ஆகியவையும் பாடம் தொடர்பாக மட்டுமே உள்ளன. இலக்கணம் தனியொரு

பாடநூலாக இருந்தாலும் இப்பாடநூலிலும் இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், வழூஉச்சொற்கள், சந்திப்பிழை எனப் பல பகுதிகளும் பயிற்சி செய்து மதிப்பிடப்படுகிறது.

உரைநடைப்பகுதிக்கு எனக் கருத்தை அறிதல், சுருக்கத்தை அறிதல், குறிப்பெடுத்தல், படித்தல், குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல், புதியசொற்கள் சொற்களஞ்சியம், பழமொழிகள், மரபுதொடர்கள் மேற்கோள்கள், வாக்கிய வகைகள், பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள், பாடம் தொடர்பான நூல்களைப் படிக்கும் ஆர்வத்தை தூண்டுதல், அகரமுதலியைப் பார்த்தல் என 16 வகையான அறிதல் பகுதிகள் உள்ளன. இதில் மாணவர்கள் பாடத்தை முழுமையாகக் கற்றால் மட்டுமே இவைகளை அறிய முடியும். மேலும் இப்பகுதிகளில் ஆளுமைத்திறனும் ஏற்படுகிறது. பாடத்தை முழுவதும் கற்காத மாணவர்களால் இப்பயிற்சிகளை கற்கவோ தானே செய்யவோ இயலாது. இவ்வாறு செய்யுள் பகுதிகளுக்குக் கொடுக்கப்பட்டப் பயிற்சிகளே உரைநடைப் பகுதியிலும் உள்ளன. எனவே, மாணவர்கள் வாக்கிய வகை சுட்டுக, சந்திப் பிழை நீக்கல், நிறுத்தற்குறிகளை இடுதல், அகராதியைப் பயன்படுத்துதல் வினாவிற்கு விடையளித்தல், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம் என அனைத்துப் பயிற்சிகளையும் முழுமையாகத் தாமே செய்து முடிக்கும் அளவு ஆளுமையைப் பெறுகிறார்கள். ஒரே வகையான பயிற்சிகளே மீண்டும் மீண்டும் கொடுத்ததால் மாணவர்கள் கற்றதைத் தன் மதிப்பீடு செய்ய இப்பயிற்சிகள் பெரிதும் பயன்படுகிறது. மொழி ஆளுமை வளர்க்கும் வகையிலேயே இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஒன்பதாம் வகுப்பு (2005-2010)**

இப்பாடநூலில் இலக்கணமும் துணைப்பாடமும் கொடுக்கப்பட்டுள்ளது. முன் வகுப்பில் படித்த இலக்கணப்பகுதிகளே மேலும் விளக்கமாகவும் வேறுபட்ட எடுத்துக்காட்டுகளுடனும் விளக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கணப்பகுதியின் மூலம் மொழியை எழுத்துத் தொடக்கம் முதல் மாணவர்கள் உரிய முறையில் கட்டுரைகள் எழுதும் அளவிற்குத் தன் கருத்தை இலக்கணப்பிழைகள் இன்றி விளக்கிக் கூறும் அளவிற்கு மாணவர்கள் மொழியில் ஆளுமைத்திறனைப் பெற உதவுகிறது. ஒவ்வொரு பகுதியும் நன்கு விளக்கப்படுவதால் பயிற்சிகள் குறைவாக இருப்பினும் மாணவர்களின் பெரும்பாலானவர்கள் முழு ஆளுமையைப் பெற உதவுகிறது.

துணைப்பாடப்பகுதியில் பல வேறுபட்டக் கருத்துக்களைக் கொண்ட கதைகள் கொடுக்கப்பட்டு அவைகளைச் சுருக்கமாகக் கட்டுரை வடிவிலோ, உரையாடல் அல்லது கதை வடிவிலோ எழுத மாணவர்கள் இலக்கணப்பகுதியில் கற்ற செய்திகள் பயன்படுகின்றன. ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் எவ்வித இலக்கணப் பிழையோ மொழிப் பிழையோ இன்றிக்

கட்டுரையை எழுதினால் அதுவே இப்பாடநூல் மூலம் மாணவர்கள் முழு ஆளுமையைப் பெற்றதாகும்.

**ஒன்பதாம் வகுப்பு (சமச்சீர் முறை)**

இதில் பத்து இயல்கள் உள்ளன. இப்பத்து இயல்களில் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் என்ற வரிசையில் பாடங்கள் உள்ளன. செய்யுள் பகுதிகள் இலக்கியம் மற்றும் அதன் மூலம் தமிழ் மொழி வரலாற்றை அறியும் வகையில் பாடல்கள் வரிசைப்படுத்தித் தொகுக்கப்பட்டுள்ளது. உரைநடைப்பகுதியில் தமிழ் மொழிபற்றிய பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. செய்யுள் பகுதியையும் அதில் உள்ள பயிற்சிகளையும் புரிந்து கற்கும் மாணவர்களுக்கு அவை அவர்களின் மனதில் பசுமரத்தாணி போல நன்கு பதிந்து பின்வரும் காலங்களில் அவ்விலக்கியச் செய்திகளை வாழ்வில் பயன்படுத்த, ஏதுவாக இருக்கும். ஆனால் மனனம் செய்பவர்களால் அது இயலாது.

உரைநடைப் பகுதியில் உள்ள பாடக்கருத்துக்கள் மாணவர்களுக்கு பல்வேறுபட்ட செய்திகளை அறிந்து கற்கும் ஆர்வத்தை வளர்க்கிறது. இதன் இறுதியில் பாடம் தொடர்பானப் பயிற்சிகள் மட்டுமே உள்ளன. ஆனால், ஒவ்வொரு இயலின் இறுதியிலும் மொழித்திறன் பயிற்சிகளும் வாழ்க்கைத்திறன் பயிற்சிகளும் மதிப்புக்கல்வியும் வழங்கப்படுவதால் இவ்வகுப்பில் மாணவர்கள் தாங்கள் மொழித் திறனில் ஆளுமைபெறுவது போலவே வாழ்க்கைத்திறன் மற்றும் மதிப்புக் கல்வியிலும் நல்ல ஒரு திறன் வளர்ச்சிப்பெறுகிறார்கள். இலக்கணப்பகுதிகள் விளக்கங்கள் மட்டுமே உள்ளன. ஆனால் போதிய பயிற்சிகள் ஏதும் இல்லை. இப்பாடநூலில் இலக்கணப்பகுதி இன்னும் பல வேறுபட்ட உதாரணங்களுடன் விளக்கி இருந்தால் மாணவர்கள் அனைவரும் இப்பகுதியில் முழுமையான ஆளுமைத்திறனைப் பெற்றிருப்பார்கள் ஆசிரியர் பாடநூலில் உள்ளதை விளக்கும் போது புரிந்த மாணவர்கள் மட்டுமே முழுமையாகக் கற்றவர் ஆகிறார்கள். ஆசிரியர் பாடநூலில் உள்ளதை மட்டும் கூறும் போது புரியாத மாணவர்களுக்கு அதேபோல் இன்னும் பல பயிற்சிகள் எடுத்துக்காட்டுகள் கொடுத்து விளக்கும் போது புரிந்து கொள்வார்கள். இவ்வாறு குறைவான எடுத்துக்காட்டும் பயிற்சிகளும் உள்ள பகுதியை மாணவர்கள் அவர்களாகவே வேறு பொருத்தமான பயிற்சிகள் எடுத்துக்காட்டுகள் கொடுத்து விளங்கிக்கொள்ளும்போது மாணவர்களின் கற்றல் முழுமையடைகிறது.

**ஒன்பதாம் வகுப்பு (2018ல் மாற்றப்பட்டது)**

சமச்சீர் முறை அறிமுகப்படுத்தப்பட்டப் பிறகு 2011 முதல் 2017 வரை ஒரே பாடநூல் பயன்படுத்தப்பட்டது. 2018ம் ஆண்டு 6 மற்றும் 9ஆம் வகுப்புப் பாடநூல் மாற்றப்பட்டது. மாற்றப்பட்டப் பாடநூலில் பல புதிய உத்திகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றை இணையம்வழி கற்கவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் கற்றல் நோக்கமும், இறுதியில் இணையத்தில் காண்க பயிற்சியும் உள்ளன. ஆனால், ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் பயிற்சிகள் இல்லை. இயலின் இறுதியில் பாடம் தொடர்பானப் பயிற்சிகளுடன் சேர்த்து நூல் வெளிப்பகுதியில் ஏதேனும் ஒரு நூலைப்பற்றிய அறிமுகமும் தெரியுமா? பகுதியில் புதிய உலகச் செய்திகளையும், மொழியை ஆள்வோம் என 8ற்கும் மேற்பட்ட பயிற்சிகளும் மொழியோடு விளையாடு என்ற பகுதியில் 5ற்கும் மேற்பட்ட பயிற்சிகளும் நிற்க அதற்குத் தக பகுதியில் சமுதாயத்தில் நமக்குள்ள பங்கையும், சிலகலைச்சொற்களை அறியவும், நூல்கள் பற்றிய அறிமுகமும், இணையத்தில் தேடி கற்கவும் எனப் பல பயிற்சிகள் உள்ளன. இவ்வாறு இப்பாடநூலானது மொழி ஆளுமைக்கு மட்டும் இன்றி பல உலக வழங்கில் பொறுப்புகள் மற்றும் தேடிகற்றல் எனப் பிற திறன்களில் ஆளுமைபெறும் வகையில் இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தம் தாய்மொழியையும் இணையம் வழிக்கற்கவும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**பத்தாம் வகுப்பு (2003-2010)**

பத்தாம் வகுப்பில் மாணவர்களுக்குப் பல இலக்கிய வரலாற்றுக் கதைகள் செய்யுட்பாவுடன் கற்பிக்கும்போதுதான் கற்ற செய்யுட்பாவைத் தன் வாழ்வில் ஏற்படும் சூழ்நிலைகளில் பயன்படுத்தும் அளவு ஆசிரியர் இலக்கியங்களையும் அதன் பயிற்சிகளையும் கற்பிப்பதன்வழி அனைத்து மாணவர்களும் இலக்கிய அறிவைப் பெறும் நிலை ஏற்படும்.

உரைநடைப் பகுதியில் பல்வேறுபட்டப் பகுதிகள் பாடமாக உள்ளன (தொழிநுட்பம், மனையியல், செய்நன்றி மறவாச்செம்மல்) இவற்றில் உள்ள பயிற்சிகளில் அருஞ்சொற்பொருள், வினாவிடை, புறவயவினாக்கள், மொழித்திறன் வளர்ப்பயிற்சி, மொழித்திறன் வளர்த் தொடர்ப்பயிற்சி ஆகியவை மூலம் மாணவர்களின் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், புரிதல் போன்ற திறன்களை வளர்த்து அதன் மூலம் மொழியாளுமையை வளர்க்க உரிய நடடிவக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பாடநூலில் உள்ள பயிற்சிகளை மாணவர்கள் பாடம் கற்பித்தபின் ஆசிரியரின் வழிகாட்டுதல் இன்றிச் செய்ய இயலும் எனில் அவ்வாறு செய்பவர்களே முழு ஆளுமையைப் பெற்றவர்கள் ஆவர். ஏனெனில் பயிற்சிகள் அனைத்தின் கருத்துக்கள் மாறினாலும் செய்யும் முறை மற்றும் விதிகளை முன் வகுப்புகளில் கற்றிருப்பர். ஆசிரியர் வழிகாட்டல் இன்றிச் செய்ய இயலாத மாணவர்களின் ஆளுமைத்திறன் சற்றுக் குறைவே ஆகும். பத்தாம் வகுப்பில் மொழி ஆளுமைக்கு முக்கியத்துவம் வழங்குவது போலக் கதை, கட்டுரை, கவிதை எனப் பல படைப்புகளை மாணவர்கள் படைக்கவும் உரிய முறையில் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

**பத்தாம் வகுப்பு (இலக்கணம்)**

இப்பாடநூலில் எழுத்து, சொல், பொது, புணர்ச்சி, பொருள், யாப்பு, அணி மொழிப்பயிற்சிகள் எனப் பல இலக்கணப் பகுதிகள் இருப்பினும் இவை அனைத்தும் 4ம் வகுப்பு முதல் சிறிது சிறிதாக விளக்கப்பட்டு 6 முதல் 9 வகுப்பு வரை நன்கு புரிந்து கற்கும் வகையில் கற்பிக்கப்பட்டுள்ளது. எனவே, 10-ம் வகுப்பில் மாணவர்கள் இவ்விலக்கணப்பகுதிகளை நன்கு புரிந்து பயன்படுத்த எளிதாக இருக்கும். இப்பகுதியில் உள்ளபயிற்சிகளில் வினாவிடைகள் மட்டுமே உள்ளன. இப்பயிற்சியின் மூலம் மாணவர்கள் தம் தாய்மொழித் தமிழில் தான் கற்றதை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என்பதன் மூலம் அவர்களின் ஆளுமை மதிப்பிடப்பட்டு ஆளுமைத் திறன் குறைவாக உள்ள பகுதிகளை மீண்டும் விளக்கிப் பயிற்சி கொடுக்கப்படும்போது ஆளுமைத்திறன் குறைவாக உள்ள மாணவர்கள் தன்னை வளர்த்துக் கொள்ள ஏதுவாக உள்ளது. துணைப்பாடப் பகுதியில் உள்ள அறிவுரைக் கதைகள் பல்வேறுபட்டப் பகுதிகளில் மக்கள் பேசும் பேச்சு வழக்கில் உள்ளது. இக்கதைகள் மூலம் மாணவர்கள் ஒரு பொருளுக்கானப் பல வேறுபட்ட பகுதியில் பயன்படுத்தும் சொற்களை அறியும் திறன் வளர்க்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர்களின் ஆர்வமும் வளர்க்கப்படுகிறது. பத்தாம் வகுப்புப் பாடநூலானது மாணவர்களின் மொழி ஆளுமைத்திறனை வளர்க்கவும் மொழியைப் பயன்படுத்தும் திறனை வளர்க்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பாடநூல் அனைத்தும் பாடம் தொடர்பானப் பயிற்சிகளே முழுவதும் கொடுக்கப்பட்டுள்ளன.

**பத்தாம் வகுப்பு (சமச்சீர் முறை)**

இப்பாடநூலில் 10 இயல்கள் உள்ளன. சமச்சீர் முறை தொடங்கியது முதல் 6 ஆம் வகுப்பில் இருந்தே செய்யுள் உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் என்ற வரிசையில் பாடங்கள் வகைப்படுத்தப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது. பயிற்சிகள் மொழி ஆளுமையை மதிப்பிடவும் வளர்க்கும் வகையிலும் உள்ளன. மேலும் வாழ்க்கைத் திறன் பயிற்சிகள் மதிப்புக்கல்வி அறிந்து கொள்க, எனப் பல பகுதிகள் மூலம் மாணவர்களுக்குப் பல பயனுள்ள பயிற்சிகளும் வளர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சமச்சீர் முறைப் பாட நூலானது மனப்பாடம் செய்யாது புரிந்து விரும்பிக் கற்கும் வகையில் மாணவர்கள் பயிற்று விக்கப்படுகின்றனர். இப்பாடநூல் மூலம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், போன்ற அடிப்படைத் திறன்களுடன் வரைதல், படைப்பாற்றல் முடிவவெடுத்தல், சிந்தித்துச் செயல்படல், உதவிசெய்யும் பண்புகள், நல்ஒழுக்கங்கள் என இன்னும் பற்பல திறன்களும்

வளரத் தேவையான அறிவுரைகள் பயிற்சிகள் இப்பாடநூலில் உள்ளது. பாடங்கள் நன்கு விளக்கமாகக் கருத்துக்களைக் கூறும் வகையிலும் பல வேறுபட்டப் பாடங்கள் தொகுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டு உள்ளது. பாடம் தொடர்பானப் பயிற்சிகள் மூலம் மாணவர்கள் அப்பாடத்தை எந்த அளவு உற்றுநோக்கிக் கற்றுள்ளனர் என அறிய உதவுகிறது. மேலும் பல புதிய அறிய படைப்புகளைப் படைக்கவும் மொழியைப் பற்றி மேலும் கற்கும் ஆர்வத்தையும் வளர்க்கிறது இப்பாடநூல்.

**மேல்நிலை — முதலாம் ஆண்டு**

இப்பாடநூலானது செய்யுள் மற்றும் உரைநடைகளைக் கொண்டுள்ளது. செய்யுள் பகுதியில் வாழ்த்து, தொகை நூல்கள், அறஇலக்கியம், தொடர்நிலைச்செய்யுள், சிற்றிலக்கியங்கள், மறுமலர்ச்சிப்பாடல்கள், வழிபாட்டுப்பாடல்கள் என வகைப்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு இலக்கியச் சுவை குறையா வண்ணம் கற்பிக்கப்பட்டுப் பின் பாடம் தொடர்பானப் பயிற்சிகள் மாணவர்களே செய்ய ஊக்கப்படுத்தப் பட்டுள்ளனர். பயிற்சிகளுடன் இலக்கணமும் விளக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் குறைவாகவே இருப்பினும் அக்குறைந்த பயிற்சிகள் முழுவதும் மொழி ஆளுமைத்திறனை வளர்க்கும் நோக்கத்தையே கொண்டுள்ளன.

உரைநடைப்பகுதியில் தமிழர்கள் மற்றும் தமிழர்தம் பண்பாடு வரலாறு பற்றியப் பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பயிற்சிப் பகுதியில் வினாக்களும் மொழித்திறன் வளர்ப்பயிற்சிகளே அனைத்துப் பாடத்திற்கும் பயிற்சிகளாக இருப்பதால் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் பிறருக்குத் தான் விளக்கும் அளவிற்கு மொழி ஆளுமைப் பண்பைப் பெறுகிறார்கள். பயிற்சிகள் அனைத்தும் மொழித் திறன் வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரே மாதிரியானப் பயிற்சிகளாக இருப்பதால் மாணவர்கள் ஆசிரியரின் வழிகாட்டலின்றி தானே முயன்று செய்யும் அளவு மொழி ஆளுமையைப் பெறுகிறார்கள். இப்பாடநூலானது கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற அடிப்படைத் திறன்களை மட்டும் வளர்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பயிற்சிகள் எனப் பார்த்தால் பாடக்கருத்துக்களைத் தொடர்ந்து “தெரிந்து தெளிவோம், நூல் வெளி, கற்பவை கற்றபின், தெரியுமா?, இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சிவிதி, நம்மை அளப்போம் (பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினா) ஆகிய பாடம் தொடர்பான பயிற்சிகளும் மொழியை ஆள்வோம், தமிழாக்கம் தருக, பிறமொழிச்சொற்களைத் தமிழ்ப்படுத்துக, கடிதம் வரைதல், மொழியோடு விளையாடு, செய்து கற்போம், சொற்சுவை, நிற்க அதற்குத் தக, கலைச்சொல் அறிவோம், இணையச்செயல்பாடு போன்ற பாடக்கருத்துக்களைக் கடந்து மாணவர்கள் தாங்கள்

கற்ற தமிழ் மொழியில் தாங்கள் பெற்ற ஆளுமையை மதிப்பீடு செய்து பார்க்கும் அளவிற்கு பயிற்சிகள் உள்ளன.

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு (செய்யுள், உரைநடை, துணைப்பாடம்)**

இப்பாடநூலானது மேல்நிலை முதலாம் ஆண்டில் படித்த அனைத்துச் செய்யுள் பகுதிகளையும் அடுத்த ஆண்டு கற்கும் கருத்துக்கள் மட்டும் மாறுபடும் வகையில் அப்படியே கொடுக்கப்பட்டு விளக்கப்படுகிறது. செய்யுள் பகுதியில் ஒவ்வொரு செய்யுள் பகுதியின் இறுதியிலும் இலக்கணங்கள் விளக்கப்பட்டு வருகிறது. அவ்விலக்கணமும் முன்வகுப்புகளில் படித்தவையே, பயிற்சிகளைச் செய்ய இவ்விலக்கணப் பயிற்சி உதவுகிறது.

பயிற்சிகள் பாடம் தொடர்பானது. ஆனால், மொழி ஆளுமையை வளர்க்கும் வகையில் உள்ளது. உரைநடைப்பகுதியில் 8 வெவ்வேறு இலக்கியத்தினைப் பற்றியும், தமிழ்நாடு, தமிழர், தமிழ் செம்மொழி பற்றியும் பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றின் பயிற்சிகளில் வினாக்கள், மொழித்திறன் வளர்ப்பயிற்சிகள் சொல்வளம், என மொழி ஆளுமை வளரும் வகையிலே பயிற்சிகள் உள்ளன.

துணைப்பாடப் பகுதியில் உள்ள அறநெறிக்கதைகள் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்ப்பதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. மேலும் கற்பனைத்திறன் வளர்க்கவும் உதவுகிறது. இப்பாடநூலானது மாணவர்களின் மொழி ஆளுமை பண்பை வளர்ப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்களில் வாழ்விற்குத் தேவையான அறவுரைப் பகுதிகள், தன்னம்பிக்கை விடாமுயற்சி பற்றிய விழிப்புணர்வு செய்திகள் இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு**

**(செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் மொழிவளம்)**

2006-ஆம் ஆண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு சிறப்புத் தமிழ் என்ற நூலை அறிமுகப்படுத்தி உள்ளது. செய்யுள் பகுதியில் வாழ்த்து, அற இலக்கியம், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், மறுமலர்ச்சிப்பாடல்கள் ஆகியவை உரிய முறையில் கற்பிக்கப்படுகிறது. இதில் பயிற்சிகள் பகுதியில் புறவயவினாக்கள் மற்றும் பத்திவினாக்கள் மட்டுமே உள்ளன. உடைநடைப்பகுதியில் 6 பாடங்கள் கொடுக்கப்பட்டு அவற்றின் பயிற்சிப் பகுதியில் குறிப்பு விளக்கமும், மொழிநடை, புறவயவினாக்கள், பத்திவினா, நெடுவினாக்கள் ஆகியவையே உள்ளன. இலக்கணப்பகுதியில் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள இலக்கணப்பகுதிகள் விளக்கப்பட்டு இறுதியில் புறவயவினாக்களும் வினா விடையும் பயிற்சியாக உள்ளன. துணைப்பாடப்பகுதியில் இலக்கிய வரலாறு விளக்கப்பட்டுள்ளது. மொழிவளம்

பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகள் மட்டுமே விளக்கப்பட்டுள்ளது. பயிற்சிகள் என எதுவும் கொடுக்கப்படவில்லை. இப்பாடநூலானது, இலக்கிய இலக்கண அறிவைப் பெறும் வகையில் செய்திகள் மட்டுமே கொடுக்கப்பட்டு மதிப்பீட்டுச் செயலுக்குத் தேவையான பயிற்சிகள் என எதுவும் தரப்படாததால் இப்பாடநூலை மாணவர்கள் எவ்வாறு கற்றனர் என்பதை அறிய பாடநூலில் வழிகள் இல்லை. கற்பித்த ஆசிரியரே தன் சொந்த முயற்சியில் மதிப்பீட்டுச் செயலை மேற்கொண்டால் மட்டுமே இதில் மாணவர்களின் ஆளுமையை அறிய இயலும். பாடங்கள் சிறப்பாக உள்ளது மட்டுமே இப்பாடநூலின் குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

சிறப்புத்தமிழ் பாடநூலைப் பொருத்தவரை 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பாடப்பொருண்மைகள் ஒன்றாகவும், பாடத்தலைப்புகள் மட்டுமே வெவ்வேறாகவும் உள்ளன. பயிற்சிகளும் இருபாடநூல்களிலும் ஒரேவிதமான பயிற்சிகளே உள்ளன. சிப்புத்தமிழ் பாடநூலானாது மாணவர்களின் மொழி ஆளுமையை வளர்க்கும் வகையிலும் மாணவர்களை படைப்பாளர்களாக உருவாக்கும் வகையிலும் அவர்களின் சிந்தனையை விரிவுப்பத்தும் வகையிலேயே உள்ளன.

**முடிவுரை**

இடைநிலை மற்றும் மேல்நிலை வகுப்பு வாரியாகப் பாடத்திட்டத்தின்வழி மாணவர்கள் அடைந்த ஆளுமைப் பண்புகள் என்ற இக்கட்டுரையில் மாணவர்கள் மத்தியில் இலக்கியம் பற்றிக் கருத்து மற்றும் இலக்கியம் குறித்த மாணவர்களின் மனப்பான்மை மற்றும் வகுப்பில் ஆசிரியர்கள் கற்பிக்கும்போது மாணவர்கள் இலக்கியத்தைப் புரிந்துக்கொள்ளும் விதம் மற்றும் தன் வாழ்வில் இலக்கிய விழுமியங்களைப் பயன்படுத்தினார்களா என்பது பற்றிய செய்திகள் மாணவர்களுடன் கலந்துரையாடிச் சேகரித்தத் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

இலக்கியங்களை இன்று கற்றாலும் உணர்வுப்பூர்வமாக உணர்ந்து அதில கூறப்படுவதை மாணவர்கள் கற்பதில்லை என்றும் காணமுடிகிறது. ஏனெனில் கைபேசியிலேயே வலைதளங்கள் மூலம் அனைத்தும் கிடைப்பதால் எழுத்தாளர்களின் மொழிநடையோ இலக்கியத்தில் உள்ள கருத்துக்களையோ மாணவர்களால் உணரமுடிவதில்லை. ஒவ்வொரு இலக்கியங்களையும் சற்றுத் தேர்வுக்காக மட்டுமே கற்கும் மனநிலையுடனே மாணவர்கள் தமிழ் இலக்கியங்களைக் கற்பதைக் காணமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

2000 முதல் 2010இல் பயன்படுத்தப்பட்ட ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பாடநூல்கள்.

*2011இல் அறிமுகப்படுத்தப்பட்ட சமச்சீர் பாடநூல்கள்.*

*2018இல் மாற்றப்பட்ட பாடநூல்கள்.*

*2019இல் மாற்றப்பட்ட பாடநூல்கள்.*

ஆனந்தன், சு., சௌந்திரன், T.S. *தமிழ் இலக்கிய வரலாறு — பள்ளி முன்பருவக் கல்வி.* முதற்பதிப்பு, 2003.

காமராசு, இரா. *தமிழில் மாற்று ஆய்விதழ்கள்.* பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, பதினோராம் பதிப்பு, 2015.

கார்த்திகேசு சிவத்தம்பி. *தமிழ் கற்பித்தல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, இரண்டாம் பதிப்பு, 2014.

சுந்தரமூர்த்தி, இ. *நடையியலும் இலக்கியமும்.* பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2013.

சுயம்பு, பெ. *செம்மொழித் தமிழ் சிறப்பும் வரலாறும்.* பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2004.

சேதுராமன், சி. *கற்பித்தல் கற்றல் திறன்கள்.* பாவை பிரிண்டர்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2019.

தண்டபாணி, சு. *கல்வி உளவியல்.* மீனா பப்ளிசர்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2009.

துரையரசன், க. *இணையமும் இனிய தமிழும்.* இசை பதிப்பகம், கும்பகோணம், முதற்பதிப்பு, 2009.

நாகராஜன், கி. *கல்விப் புதுமைகளும் மேலாண்மையும்.* இராம் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2010.

பிரபாகரன், உ. *தமிழ் கற்பித்தல் முறைகள் (பொதுத்தமிழ்).* அரவிந்த் பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2012.

பொன்னீலன். *தாய்மொழி வழிக்கல்வி.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, முதற்பதிப்பு, 2012.

வரதராசன், மு. *எழுத்தின் கதை, சொல்லின் கதை.* பாரி நிலையம், சென்னை, மறுபதிப்பு, 2012.

வரதராசன், மு. *தமிழ் இலக்கிய வரலாறு.* பாரி நிலையம், சென்னை, முப்பதாம் பதிப்பு, 2014.

வேங்கடசுப்பிரமணியன், கி. *கல்விச் சிந்தனைகள்.* முதற்பதிப்பு, 1982.

வேணுகோபால், இ.பா. *சிறப்புத் தமிழ் கற்பித்தல்.* சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.

## *References*

*2000 Muthal 2010il payanpaduthapatta Ondru Muthal Pannirandam Vaguppu Varai Padanoolkal.*

*2011il Arumugapaduthappatta Samaseer Padanoolkal.*

*2018il Matrapatta Padanoolkal.*

*2019il Matrapatta Paadanoolkal.*

Ananthan, Su., Soundaran, T.S. *Tamil Ilakkiya Varalaru — Palli Munparuva Kalvi.* First Edition, 2003.

Kamarasu, Ira. *Tamilil Matru Aaivithalgal.* Pavai Publications, Chennai, Eleventh Edition, 2015.

Karthikesu Sivathambi. *Tamil Karpithal.* New Century Book House (P) Ltd., Chennai, Second Edition, 2014.

Sundaramoorthi, E. *Naiyiyalum Ilakkiyamum.* Pari Nilayam, Chennai, Secnd Edition, 2013.

Suyambu, Pe. *Semmozhi Tamil Sirappum Varalarum.* Paavai Publications, Chennai, 2004.

Sethuraman, S. *Karpithal, Katral Thirangal.* Pavai Printers, Chennai, First Edition, 2019.

Dhandapani, Su. *Kalvi Ulaviyal.* Meena Publishers, Chennai, First Edition, 2009.

Duraiarasan, Ka. *Inaiyamum Iniya Tamilum.* Isai Pathippagam, Kumbakonam, First Edition, 2009.

Nagarajan, Ki. *Kalvi Puthumaikalum Melanmaiyum.* Ram Pathippagam, Chennai, Second Edition, 2010.

Prabakaran, U. *Tamil Karpithal Muraigal (Pothuthamil).* Aravindh Pathippagam, Thanjavur, First Edition, 2012.

Ponneelam. *Thaimozhi Vazhikalvi.* New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2012.

Varatharasan, Mu. *Ezhuthin Kathai, Sollin Kathai.* Pari Nilayam, Chennai, Reprint, 2012.

Varatharasan, Mu. *Tamil Ilakkiya Varalaru.* Pari Nilayam, Chennai, Thirteenth Edition, 2014.

Venkatasubramanian, Ki. *Kalvi Sinthanaikal.* First Edition, 1982.

Venugopal, I.P. *Sirappu Tamil Karpithal.* Saratha Pathippagam, Chennai, First Edition, 2009.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com